ஜனவிநோதினி.

இல. 11. நவம்பர்மீ 1871. புஸ்த. II.

வாலிபத்திற் செய்யவேண்டிய பழக்கங்கள்.

(தொடர்ச்சி.)

பத்தாவது: எந்தக் காரியத்தையும் உள்ளபடி ஆராய்ந்து அறிந்து நிதானிக்கப் பழகவேண்டும்.

எடுத்துக்கொண்ட விஷயம் எதுவானாலும் சரி, அது யாருடையதானாலும் சரி, அதன்பேரில் முந்தியே விருப்பு வெறுப்பு யாதொன்றுக்கும் இடங்கொடாமல் நிஷ்பட்சபாதமாய் நின்று, அதன் குணதோஷங்கள் இரண்டையும் நன்ருய் ஆராய்ந்து சீர்தூக்கி நிதானிக்கவேண்டும். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று வள்ளுவரும், "காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண், ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண் உற்றகுணந்தோன்ரு தாகும், உவப்பதன்கண் குற்றமுந் தோன்ருக் கெடும்" எனப் பிறரும் கூறினர். அப்படிக்கின்றி ஒன்றை ஆராய்ந்து தெளியுமுன்னதாகவே அதைப்பற்றி நம்முடைய மனதில் நன்மையாகவாயினும் தீமையாகவாயினும் ஒரு எண்ணமுண்டாக இடங்கொடுப்போமாகில், அப்புறம் அதனை வேரறக் களைந்து நீக்கல் அரிது. அது நம்மையறியாமல் நமக்குள் நிலைத்து அறிவை மழுக்கிப் புந்தியைக் குருடாக்கி யுத்திசாதனையைப் போலியாக்கிவிடும்; அப்புறம் உள்ளது ஒருநாளும் புலப்படாது; எப்பொழுதும் நெறிபிசகி நியாயம் பேசவும் பட்சபாதம்செய்யவும் பழகிவிடுவோம். "மனத்தகருப்பெனின் நல்லசெயினும், அனைத்தவையும் தீயவேயாகும்" என்றதுபோல மனமாசடைந்தோர் கண்ணுக்குச் சகலமும் விபரீதமாகவே தோன்றும். ஆதலால் ஒன்றன் குணதோஷங்களை தீர்க்க ஆராய்ச்சிசெய்து தெளியுமுன்னதாக அதைப்

பற்றி நம்முடைய மனதில் யாதொரு அபிமானமும் சிந்தனையும் வந்து நுழைய இடங்கொடுக்கப்படாது.

ஒரு புஸ்தகத்தையெடுத்து அதில் இங்கும் அங்கும் இரண்டொரு வசனங்களை வாசித்துப்பார்த்து, உடனே இது மெத்த நல்ல புஸ்தகம் அல்லது கெட்ட புஸ்தகமென்று தீர்த்துப்போடுகிறார்கள். அவ்வாறே மனிதர்களைக்குறித்தும் தீர்க்கிறார்கள். ஒருவருடன் கொஞ்சநேரம் சம்பாஷித்தஉடனே அவர் இப்படிப்பட்டவரென்று தீர்மானஞ்செய்துவிடுகிறார்கள். "ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்பார்த்தாற் போதாதா" என்று சொல்லி இரண்டொருவர்களுடைய திருஷ்டாந்தங்களை வைத்துக்கொண்டு அவர்கள் இனமெல்லாம் இப்படித்தான் இருக்குமென்று நிச்சயிக்கிறார்கள். இப்படித் தகுந்த ஆராச்சியின்றி விரைவில் தீர்மானிக்கிறதெல்லாம் பெரும்பாலும் சுத்தப் பிசகாயிருக்கிறதுமன்றி, பிசகானஅபிப்பிராயத்தினால் மனமாசடைந்து ஒன்றையாவது உள்ளபடி கிரகிக்கச் சக்தியற்றுப்போகின்றது. தாறுமாறும் கோணலுமின்றிச் செம்மையும் நேர்மையுமான மனசுடையவர்களாயிருப்பதும், அம்மனசைப் பிசகான அபிப்பிராயத்தாற் கறைபடாமல் ஆடிபோலத் துலக்கமும் சுத்தமுமாய்க் காத்துக்கொள்வதும் நன்மைகளிலெல்லாஞ் சிறந்த நன்மையாம். ஏனெனில் எப்படிப்பட்ட சுத்தமனதுடையவர்களுக்குள்ளும் சிலசில சமயங்களில் நெறிதவறி நிதானிக்கிற சுபாவமுண்டுபடுகிறது. ஒருகாலத்திலாவது தப்பெண்ணத்தினால் தவறிப்போகாத தூயமனசுடைய மனிதர் ஒருவரும் இவ்வுலகில் இல்லையென்று சொல்லலாம். ஆகையினாலேதான் நாம் இதுவிஷயத்தில் சர்வஜாக்கிரதையாயிருந்து மனதில் மாசு, கறை, தப்பெண்ணம், துரபிமானம் முதலிய யாதொரு அழுக்கும் வந்து படிய இடங்கொடாமல் அதை மிகவும் தூய்மையும் துலக்கமுமாய் வைத்திருக்கவேண்டும்.

தன்னைக்குறித்து நிதானிக்கும் விஷயத்தில் தன்னுடைய தாரத்துக்கும், தகுதிக்குமிஞ்சத் தன்னை மதிக்கும் சுபாவம் எப்படிப்பட்டவர்களுக்குள்ளும் உண்டென்பது நிச்சயமாதலால் உன் விஷயத்தில் உன்னுடைய மதிப்பை நம்பாதே. உன் இஷ்டர்களுடைய மதிப்பையும் மெய்யென்று நம்பாதே. அவர்கள் உன்னைப் புகழ்ந்து உன் செவிக்கு இன்பமான வார்த்தைகளை உன்னிடத்தில் பேசுவார்களேயொழிய உன் குறைகளையெடுத்துக் கூறமாட்டார்

கள். உன்னுடைய குறைகள் பெரும்பாலும் உன்னுடைய இஷ்டர்களின் கண்ணுக்குத் தெரியமாட்டா; தெரிந்தாலும் உன்னைப் போலவே அவர்களும் அவற்றிற்குப் பல போக்குச்சாக்குகளைத் தேடிவைத்துத் திர்ப்திசெய்துகொள்வார்களாதலால் அவர்களால் அவை வெளியாகப்போகிறதில்லை. இதுவிஷயத்தில் லோகத்தாருடைய அபிப்பிராயத்தையுஞ் சாராதே. அவர்கள் வெளியரங்கமான உன் செய்கைகளைக் கண்டு அவற்றிற்குத் தக்கபடி உன்னை மெய்ச்சிப் புகழுவார்களேதவிர, அச்செய்கைகளுக்கு உன்னை ஏவிய அந்தரங்கமான உன் நோக்கங்களையும் உத்தேசியங்களையும் ஒன்றுமறியார்கள். ஒருவேளை நீ அவற்றைத் தகாத எண்ணத்தினால் அல்லது கெட்டநோக்கத்தினால் ஏவுண்டு செய்திருக்கலாம். நன்னோக்கத்தினாற் செய்யாத செய்கையெதுவும் நற்செய்கையாகமாட்டாது. அப்படியிருக்க உலகம் அறியாமையினால் உன்னைப் புகழும்போது அப்புகழ்ச்சியை ஆதாரமாகக்கொண்டு நீ உன்னை மதிப்பது சரியல்ல. உள்ளத்தின் விருப்பங்களையும் உத்தேசியங்களையும் வஞ்சகமின்றி வகையறுத்தறியுமுன் செய்கைகளை நிதானிக்கக்கூடாது. சில சமயங்களில் நம்மைப்பற்றி நிதானிக்கும் விஷயத்தில் நமது சத்துருக்களுடைய அபிப்பிராயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். அது மிகக் கண்டிப்பும் கடினமுமாயிருந்தபோதிலும் நிர்தாக்ஷண்ணியமான சிந்தையினின்று பிறக்கிறபடியால் அது வெகுதூரம் யதார்த்தமாயிருக்குமென்பதற்கு ஐயமில்லை. நம்முடைய குறைகளை நாம் கண்டுகொள்வதற்கு நம்முடைய சத்துருக்களைப்போல நமக்கு உதவிசெய்யத்தக்கவர்கள் வேறியாருமில்லையென்று சொல்லலாம்.

ஒன்றை உள்ளபடி வகையறுத்து நிதானிக்கவேண்டுமாகில், முதலாவது சுபட்சத்திலுள்ள நியாயங்களையெல்லாம் நன்காராய்ந்து ஒரு கடுதாசியில் குறிக்கவேண்டும். இரண்டாவது விபட்சத்திலுள்ள நியாயங்களையும் ஆய்ந்து தேடி அதற்கு எதிர்ப்பக்கத்தில் ஒன்றுவிடாமல் எழுதவேண்டும். அப்புறம் அவ்விருபட்சத்து நியாயங்களிலும் எது அதிக பலமும் உத்தமமும் உண்மையுமானதென்று சீர்தூக்கித் தெளிந்து அதன்பேரில் தீர்மானஞ் செய்யவேண்டும்.

ஆபிரிக்கா பிரயாணம்.

(தொடர்ச்சி.)

1796-ஆு ஜனுவரிமீ 15உ பார்க் என்பவர் கேசான்நாட்டு அரசனாகிய டெம்பா சீகோ ஜாலா என்பவரைக் கண்டு பேசுவதற்கு உத்தரவுபெற்றார். ஆனால் அவர் அரசனிடத்திற்குப் புறப்பட்டுப்போகையில் ஊரிலுள்ள ஜனங்களெல்லாம் அதிசீப்பமான ஓர் வெள்ளை மனிதன் வந்திருக்கிறானென்று கேள்விப்பட்டு பெருங்கூட்டங்களாக ஓடிவந்து, அவனைப் பார்க்கும்பொருட்டு வெகு நெருக்கமாய் அவரைச் சூழ்ந்துகொண்டபடியால் அவர் ராஜனிடத்திற்குப் போய்ச்சேர இடமில்லாதிருந்தது. பின்பு வெகுநேரஞ் சென்றபின் மிகுந்த வருத்தத்தின்பேரில் ஜனங்களை விலக்கி அவர் செல்லுவதற்கு வழியுண்டுபண்ணப்பட்டபோது, அவர் ராஜனிடத்திற்குப் போய் அவருக்கு வணக்கமாய்ப் பணிந்து மரியாதை செலுத்தினார். அச்சமயத்தில் அரசன் தம் அரண்மனையாகிய ஓர் விஸ்தாரமான குடிசைக்குள் ஓர் பாயின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருக்கு அப்போது சுமார் அறுபதுபிராயமிருக்கும். அவர் பார்க் என்பவரைக் கண்டபோது அவரைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு, அவர் ஆபிரிக்கா கண்டத்தில் செய்யும் பிரயாணத்திற்கு நோக்கம் யாதென விசாரித்தறிந்து, வெகு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்து, தம்மாலியன்ற உதவிகளையெல்லாம் அவருக்கு உச்சாகமாய்ச் செய்வதாக வாக்களித்தார். அரசன் பார்க் என்பவரிடத்தில் தாம் முந்திய ஆபிரிக்கா பிரயாணியாகிய மேஜர் அவுடன் என்பவரைக் கண்டிருப்பதாகவும், தாம் அவருக்கு வெள்ளைக் குதிரையொன்றை வெகுமதியாகக் கொடுத்ததாகவும் சொன்னார். இவ்வாறு பார்க் என்பவர் அரசனோடு சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தம்மிடத்திற்குப்போய் அரசனுக்குச் சில வெகுமதிகளை எடுத்துக்கொண்டு திரும்ப அவ்விடத்திற்குப்போய் அவற்றை அவர்முன் வைத்தார். அரசன் அவற்றை மிகுந்த சந்தோஷத்துடன் அங்கீகரித்துக்கொண்டு, பதில்வெகுமதியாக ஒரு பெரிய வெள்ளைக் காளையை பார்க் என்பவருக்குக் கொடுத்தார். இவ்வெகுமதி

யானது பெரிய ராஜதயவிற்கு அடையாளமாகையால், பார்க் என்பவரின் வேலையாட்கள் அதைப்பற்றி மிகுந்த சந்தோஷங் கொண்டாடினார்கள். அச்சமயத்தில் அப்பிராந்தியங்களில் யுத்தங்கள் சம்பவிக்கப்போகிறதாகத் தோன்றினபடியால், யுத்தகாலத்தில் அந்நாடுகளின் வழியாய்ப் பிரயாணம்பண்ணுவது மோசமான காரியமாகையால், அரசன் பார்க் என்பவரை நோக்கி: "இப்பொழுது ஒருவரோடொருவர் வாதித்து எதிர்த்துநிற்கும் அரசர்கள் சமாதானமாகும்வரையும் நீர் சிலதினங்களுக்கு இவ்விடத்திலே தங்கியிரும்" என்று மிகவும் வற்புறுத்திச் சொன்னார். பார்க் என்பவர் தமது பிரயாண செலவிற்காக அவ்விடத்திலுள்ள ஒரு வியாபாரியிடத்தில் டாக்ட்டர் லேயிட்லி என்பவரின் கணக்கில் கொஞ்சம் பணங்கேட்டு அதற்குச் சமமாய்க் கொஞ்சம் பொன் மணலை வாங்கிக்கொண்டார். இச்சமாசாரம் உடனே ஊரெங்கும் பரம்ப, அரசனுடைய குமாரனாகிய சாம்போ சீகோ என்பவன் சில குதிரைச்சேவகருடன் பார்க் என்பவரிடத்திற்கு ஓடிவந்து, அவரைநோக்கி: "இந்நாட்டரசனுக்கு நீர் செலுத்தவேண்டிய தீர்வைப்பணத்திற்காக உம்மிடத்திலிருக்கிற பணத்தில் பாதிப்பணமும் நான் அரசனுடைய குமாரனாகையால் எனக்குத் தகுந்த வெகுமதியும் நீர் உடனே என்னிடத்தில் கொடுத்துத் தீர்க்கவேண்டும்" என்று ஓரேபிடியாய் வாதாடினான். அப்பால் பார்க் என்பவருக்குப் பணங்கொடுத்த வியாபாரியானவன் வந்து அரசனுடைய குமாரனிடத்தில் வெகுதூரம் பரிந்துபேசினதின் பேரில், அவன் பார்க் என்பவரிடத்தில் ஐரோப்பிய வர்த்தகசரக்குகளில் கொஞ்சமும், துப்பாக்கி மருந்து குண்டில் கொஞ்சமும் வாங்கிக்கொண்டு, இனி அவர் கேசான்நாட்டில் தங்கியிருக்கும் காலத்திலெல்லாம் அவரிடத்தில் வேறொன்றுங் கேட்டு வாங்குவதில்லையென்று உடன்படிக்கை செய்துவிட்டுப் போய்விட்டான்.

கேசான் நாடானது மலைகள் குன்றுகளால் சூழப்பட்டிருக்கிறது. அது மகா செழிப்பும் சிறப்பும் பொருந்திய நாடு. இந்நாட்டில் மிகுதியான பட்டணங்களும் கிராமங்களும் அடங்கியிருக்கின்றன. இப்பட்டணங்கள் கிராமங்கள் ஒவ்வொன்றைச் சுற்றிலும் சிறப்பும் விஸ்தாரமுமான பயிர்நிலங்களையும் தோட்டங்களையுங் காணலாம். மேலும் இந்நாடு மிகுந்த குடிகளடங்கியது. பார்க் என்பவர் இதுவரைக்கும் கண்ட ஆபிரிக்கா நாடு

களிலெல்லாம் சிறப்பிலும் குடிப்பெருக்கத்திலும் இந்நாட்டிற்குச் சமானமானது ஒன்றுமில்லை.

பார்க் என்பவர் இந்நாட்டைச்சேர்ந்த ஓர் மலையைக் கடந்துபோகையில், அதிலுள்ள கற்பாறைகளில் பெரிய குகைகளும் வெடிப்புகளுமிருக்கக் கண்டு, அவற்றுள் ஓநாய் முதலிய துஷ்டமிருகங்கள் பகல்காலத்தில் தங்கியிருக்குமென்று கேள்விப்பட்டார். இம்மலையை அடுத்த ஓர் கிராமத்தில் பார்க் என்பவர் தங்கியிருக்கையில், ஓர் இராத்திரி அத்துஷ்டமிருகங்கள் அக்கிராமத்திற்குச் சமீபமாய் வர, அக்கிராமத்திலுள்ள நாய்கள் அகோரமாய் ஊளையிட்டன. ஜனங்கள் இதைக் கேட்டுத் தகுந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தடிகள்போல் கட்டின காய்ந்த புல்கட்டுகளைக் கையில் பிடித்துக்கொண்டு, தங்கள் ஆடுமாடுகள் அடைந்திருக்கும் இடத்திற்கு விரைந்துபோய் தங்கள் கையிலுள்ள காய்ந்த புல்கட்டுகளைக் கொளித்தி அங்குமிங்கும் வீசிக்கொண்டு பெருங்கூக்குரலிட்டார்கள். அப்போது அவர்கள் கோரிக்கையின்படியே துஷ்டமிருகங்கள் அவ்வெளிச்சத்தைப் பார்த்து பயந்து அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய்விட்டன. பின்பு அச்சனங்கள் நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்ததில், அநேக ஆடுமாடுகள் அத்துஷ்டமிருகங்களால் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் போயினவென்று கண்டார்கள்.

அந்நாட்டு ராஜதானியாகிய கூனியாகாரி என்ற பட்டணத்திலிருந்து அடுத்த நாடாகிய கார்டா என்னும் ராஜ்யத்தின் எல்லைவரைக்கும் பார்க் என்பவருக்கு வழிகாட்டிக்கொண்டு போவதற்காக இரண்டு குதிரைச்சேவகர் பெப்ருவரிமீ 3உ அவருக்கு அகப்பட்டார்கள். பின்பு அவர் இதுவரையிலும் தம்முடன் கூடவந்த உடன்பிரயாணியும் சிநேகிதனுமாகிய கருமானிடத்தில் கடைசியாக விடைபெற்றுக்கொண்டு, அவ்விடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு சூமு என்னும் ஓர் கிராமத்தில் போய் அன்று இராத்தங்கினார். பெப்ருவரிமீ 9உ பூலாது என்னும் பருவதத்தின் சிகரத்தைக் கண்டார். பின்பு இரண்டொரு தினத்திற்குள் மணலான சமபூமியுள்ள கார்டா நாட்டிற்குள் பிரவேசித்தார். அங்கோர் கிராமத்தில் பார்க் என்பவர் சில பாசிமணிகளைக் கொடுத்து தமக்கும் தம்மைச்சேர்ந்த ஆட்களெல்லாருக்கும் போதுமான பாலும் தானியமாவும் வாங்கி எல்லாரும் சாப்பிட்டுத் திருப்

தியடைந்தார்கள். அன்று இராத்திரி பிசூரா என்னும் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். இவ்விடத்தில் பார்க் என்பவர் தங்கியிருப்பதற்கு வீடுகொடுத்த மனிதன் பேராசையினால் ஏவப்பட்டு, அவரிடத்தில் மிகவும் அதிகமான குடிக்கூலி கேட்க அவர் அதைக் கொடுக்கமாட்டேன் என்று மறுத்துவிட்டார். அப்பால் அவ் வீட்டெஜமான் பார்க் என்பவரிடத்திலிருந்த ஓர் கம்பளப்போர்வையின்மேல் அதிக ஆசைவைத்தபடியால், அதைத் தனக்குச் செல்லவேண்டிய குடிக்கூலிக்குப் பதிலாக வாங்கிக்கொண்டு மிகவும் திர்ப்தியடைந்தான். பின்பு அவன் பார்க் என்பவருக்கு வழிகாட்டியும் சகாயனுமாக ஏற்பட்டு அவருடன் பிரயாணப்பட்டான்.

பெப்ருவரிமீ 12உ பார்க் என்பவர் கார்டா ராஜ்யத்தின் ராஜதானியாகிய கெம்மு (Kemmoo) என்னும் பட்டணத்தை நோக்கி ஒரு ஆரண்யத்தின் வழியாய்ப் பிரயாணம்பண்ணினார். அவர் வழியருகே நின்ற பலவித கனிவிருக்ஷங்களினின்று கனிகளை அறுத்துக்கொண்டு நடந்துபோனார். அவர் இப்படிச் செல்லுகையில் தம்மையறியாது வழிவிலகி, தம்மைச் சேர்ந்த ஆட்களை விட்டுப் பிரிந்து ஒரு சிறு குன்றின்மேல் ஏறி தாம் வழிதப்பிப் போனதை அறிந்து திகைத்துச் சுற்றிப்பார்த்தபோது, நீகிரோ கறுப்புமனிதர் இரண்டுபேர் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு புதர்களினின்று வேகமாய் அவருக்கு நேராகவந்து அவரைக் கண்டமாத்திரத்தில் திடீரென நின்றார்கள். பின்பு அவர்களில் ஒருவன் முகம் வெளுத்து விகாரப்பட அவன் கொடிய திகிலடைந்தவனாகக் காணப்பட்டு சடுதியாய்த் தன் குதிரையைத் தட்டி ஓட்டம்பிடித்தான். மற்றவனோ மிகுந்த பயத்தினால் நடுக்கங்கொண்டு மதிமயங்கி தன் கையினால் இருகண்களையும் கெட்டியாய்ப் பொத்திக்கொண்டு, தன் சுயபாஷையில் சிலமந்திரங்களையும் ஜெபங்களையும் குளறிக்குளறி உச்சரித்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் குதிரையானது தன்னிச்சையாய் முந்திப்போன குதிரைக்குப்பின்னாலே அவனைச் சுமந்துகொண்டு மெதுவாய் நடந்துவிட்டது. இவ்வாறு அவர்கள் மிகுந்த திகில்நிறைந்தவர்களாய் ஒருமையில் தூரஞ்சென்றபோது, பார்க் என்பவரைச் சேர்ந்த ஆட்களைக் கண்டு அவர்களிடத்தில் விரைந்தோடிப்போய், அவ்வழியில் தாங்கள் கண்ட பயங்கரமான காட்சியைக்குறித்து

விவரித்துச் சொன்னார்கள். அவர்கள் பார்க் என்பவரைக் கண்ட போது வேறெந்தலோகத்திலிருந்தோ ஓர் வெள்ளை பூதம் புறப்பட்டுத் தங்களுக்கு முன்வந்து நின்றதாக நினைத்தார்களாம். அவர்களில் ஒருவன் அவரைக் கண்டக்ஷணத்தில் மிகவும் குளிர்ந்தஜலத்திற்கொப்பாய்க் குளிர்ந்த காற்றொன்று ஆகாசத்தினின்று வேகமாயிறங்கி தன்னைத் தாக்கி உச்சந்தலைமுதல் உள்ளங்கால்பரியந்தம் கொடிய நடுக்கத்தை உண்டாக்கினதாகச் சொன்னான்.

அன்று மத்தியானம் பார்க் என்பவரும் அவரைச் சேர்ந்த ஆட்களும் கார்டா நாட்டின் ராஜதானி நகரம்போய்ச் சேர்ந்தார்கள். இந்நகரம் விஸ்தாரமான ஓர் சமபூமி நடுவிலிருக்கிறது. பார்க் என்பவர் இவ்விடம் வந்து சேர்ந்தவுடனே அந்நாட்டரசன் தம்மை அவர் அன்று சாயங்காலம் வந்து காணலாமென்று செய்தியனுப்பிவிட்டு, அவர் தங்கியிருப்பதற்குத் தகுதியான ஓர் வீட்டை ஆயத்தப்படுத்தி, அவரை ஜனங்கள் சூழ்ந்து நெருக்காதபடிக்கு அவர்களை விலக்கிக்கொண்டிருக்கும்பொருட்டு ஓர் சேவகனை அனுப்பினார். இச்சேவகன் தின் கையில் ஓர் கோலைப்பிடித்துக்கொண்டு அவருடன்கூட நடந்துபோனான். அவர் தமக்கு ஆயத்தமாயிருந்த வீட்டுக்குள், பிரவேசித்தவுடனே, நாலாபக்கங்களிலுமிருந்து ஜனங்கள் கூட்டங்கூட்டமாக ஓடிவந்து அவரைப் பார்க்கும்பொருட்டு அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். இத்திரளான ஜனங்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்த வெகுநேரம்வரையில் கூடாமல்போய்விட்டது. அவர்கள் தங்களுக்கு இஷ்டமான நேரமட்டும் அவரைப் பார்த்துக்கொண்டிருந்து முற்றிலும் திருத்தியடைந்தபின்பு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள். அன்று சாயந்திரம் அரசனிடத்திலிருந்து ஆள் வந்தவுடனே பார்க் என்பவர் அவரைக் கண்டுகொள்ளும்படி அவரிடத்திற்குப் போனார். அச்சமயத்தில் அரசன் திரளான ஜனங்கள்நடுவே உட்கார்ந்திருந்தார். அவருக்கு வலதுபக்கத்தில் மல்லகஜெட்டிகளும் இடதுபக்கத்தில் பெண்டீர் பிள்ளைகளும் இருந்தார்கள். இவ்வரசன் பேர் தேசிகூராபாரி. வஸ்திராபரண விஷயத்தில் இவருக்கும் இவர் குடிகளுக்கும் யாதொரு வித்தியாசமும் தோன்றவில்லை. சுற்றிலுமுள்ள தரைக்குமேல் இரண்டடி உயரமுள்ள ஓர் மண்மேட்டின்மீது விரித்திருந்த புலித்தோலின்மேல் அவர் வீற்றிருந்தார். இதொன்றுமாத்திரமே ராஜகோ

லத்தைக் காட்டும் குறியாயிருந்தது. அரசன் பார்க் என்பவருடன் சற்றுநேரஞ் சம்பாஷித்துக்கொண்டிருந்து, அவர் அத்துடன் தமது பிரயாணத்தை நிறுத்தவேண்டுமென்றும், அப்படிக்கில்லாவிட்டால் அவருக்குப் பலவித மோசங்கள் சம்பவிக்குமென்றும் மிகவும் வற்புறுத்திச்சொன்னார். அரசன் நல்நோக்கங்கொண்டு இவ்வாறு சொன்னபோதிலும், பார்க் என்பவர் தாம் எம்மோசத்திற்கும் அஞ்சுவதில்லையென்றும், தாம் ஆதியில் கொண்ட நோக்கத்தின்படியே ஆபிரிக்காப் பிரயாணத்தை எவ்விதத்திலும் முடிக்கவேண்டுமென்றும் தாம் உறுதியாய்த் தீர்மானித்திருக்கிறதாகச் சொல்லி, அவ்விராஜ்யத்தின் எல்லையைக் கடந்துபோகுமட்டும் தம்முடன்கூட வருவதற்குத் தகுந்த வழிகாட்டியை அரசன் தமக்குக் கொடுக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார். இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ஒரு மனிதன் குதிரையின்பேரில் ஏறிக்கொண்டு மகா வேகமாய்வந்து ராஜசமுகத்தில் பிரவேசித்து, தான் அரசனிடத்தில் மகா முக்கியமான ஓர் சங்கதியைப்பற்றிப் பேசவந்திருக்கிறதாக வெளியிட்டான். உடனே அரசன் தமது பாதகுறடுகளைக் கையிலெடுத்து உயர்த்தினார். இது அவ்விடத்திலுள்ள அந்நியர்கள் அப்புறம் போகவேண்டுமென்பதைக் காட்டும் அடையாளம். உடனே பார்க் என்பவர் ராஜசமுகத்தைவிட்டுத் தம்மிடத்துக்குப் போய்விட்டார். சற்றுநேரத்துக்குப்பின்பு அரசன் நேர்த்தியான ஆடொன்றைப் பார்க் என்பவருக்கு வெகுமதியாக அனுப்பினார். மறுநாள் பார்க் என்பவர் அரசனுக்கு வெகுமதியாகத் தமது கைத்துபாக்கிகளை அனுப்பி ஒரு வழிகாட்டியை அரசன் தமக்குச் சீக்கிரத்தில் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அரசன் பார்க் என்பவர் அவ்விராஜ்யத்தை விட்டுக் கடந்துபோகுமட்டும் அவருக்குத் துணையாக எட்டுக் குதிரைச்சேவகர்கள் அவருடன் போகவும், தம்முடைய புத்திரரில் மூவர் இருநூறு குதிரைச் சேவகருடன் சற்றுத் தூரம்போய் அவரை வழியனுப்பிவிட்டு வரவும் திட்டஞ்செய்தார்.

நெருப்புக்காயங்கள்.

இவை கட்டைநெருப்பு, பழுக்கக்காய்ந்த இரும்பு, கொதிக்கிற ஜலம் எண்ணெய், உருக்கின இயம், கொதிக்கிற ஜலத்தினின்று புறப்படுகிற ஆவி முதலியவை தேகத்தின்மேல் படுகிறதினுல் உண்டாகும்.

நெருப்புக்காயங்கள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவது: நெருப்பின் உஷ்டணம் தேகத்தின்மேல் சொல்பமாய்ப் பட்டால், பட்டவிடம் சிவந்துபோம் அல்லது அதில் கொப்புளமுண்டாகும். இரண்டாவது: நெருப்பு தேகத்தின்மேல் அதிகமாய்ப் பட்டால், பட்டவிடம் கெட்டு ஜீவனற்றுப்போம். முந்தின வகுப்பைச்சேர்ந்த நெருப்புக்காயங்களைப்பார்க்கிலும், பிந்தின வகுப்பைச்சேர்ந்தவைகள் அதிகத் தொந்தரவும் மோசமுமுள்ளவைகள்.

கால்கைகளில் உண்டுபடும் நெருப்புக்காயங்களைப்பார்க்கிலும் மகா முக்கியமான இயந்திரங்களடங்கியிருக்கும் ஸ்தானங்களாகிய வயிறு, நெஞ்சு, சிரசு, கழுத்து முதலியவிடங்களில் உண்டாகும் காயங்கள் அதிக மோசமானவைகள். கொஞ்ச இடத்தில் அதிக ஆழமாய் வெந்துபோயிருக்கிற நெருப்புக்காயத்தினுலுண்டாகும் மோசத்தைப்பார்க்கிலும், தோலின்பேரில் மேற்புறமாகவே விஸ்தாரமாய் வெந்துபோயிருக்கிற காயத்தினுலுண்டாகும் மோசம் அதிகமானது. ஏனெனில் தோலின்மேல் விஸ்தாரமாய்ப் பட்டிருக்கும் வேக்காட்டினுல், தோலின்வழியாக ஓயாமல் வெளியே நீங்கிக்கொண்டிருக்கிற வேர்வை விஷங்களுக்குத் தடைநேரிட்டு, அவ்விஷங்கள் தேகத்திற்குள் தங்கி, குடல் சுவாசக்கருவியாகிய நுரையீரல், மூத்திரக் கருவி முதலிய உள்ளியந்திரங்களை வியாதிக்குட்படுத்திப் பல தொந்தரவுகளையும் மோசங்களையும் வருவிக்கும்.

வாலிபர், நடுப்பிராயமுள்ளவர்கள், தேகபலமுள்ளவர்கள் ஆகிய இவர்களைப்பார்க்கிலும் குழந்தைகள், விருத்தாப்பியர், பலவீனமும் சுகவீனமுமுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கு நெருப்புக்காயங்களினுல் அதிக சேதமும் மோசமுமுண்டாகும்.

கடுமையும் விஸ்தாரமுமான நெருப்புக்காயங்களுண்டாகும்போது சிலவேளை உடனே ஆட்கள் களைத்துப் பிரக்கினைதப்

பிக் கீழே விழுவார்கள், முகம் வெளுத்துப்போம், குளிரினால் தேகம் விடவிடென்று நடுங்கும், கைகால் விறைக்கும், வாந்தியுண்டாகும், பல் கிட்டிக்கொள்ளும், கண் நிலைகுத்திக்கொள்ளும், வாய்ப்புலம்பமுண்டாகும், சிலவேளை அதிசீக்கிரத்தில் மரணம் சம்பவிக்கும்.

கடுமையான நெருப்புக்காயங்களடைந்தவர்களுக்கு மூன்று கண்டங்களுண்டு. முதலாவது: நெருப்புப்பட்ட கொஞ்சநேரத்திற்குள் காயத்தின் கொரோத்தினால் பிரக்கினைதப்பி நெடுநேரம் மயக்கமுண்டாகும். சிலவேளை இம்மயக்கில் மரணஞ் சம்பவிக்கிறதுண்டு. இரண்டாவது: இம்முதல் கண்டம் நீங்கினபின்பு தேகத்தின்மேல் பட்ட நெருப்புக்காயத்தின் கடுமையினால் சுவாசக்கருவி, மூளை, மூத்திர இயந்திரம் முதலிய உள்ளியந்திரங்களில் கொதிப்புண்டாகி மோசமான வியாதிகள் நேரிடும். மூன்றாவது: இம்மோசமுங் கடந்துவிட்டால் நெருப்பினாலுண்டான பெரிய புண்களிலிருந்து வடியும் ஏராளமான சீழினாலும், அதன் மூலமாயுண்டாகும் ஓர்வகைக் குளிர்சுரத்தினாலும் மோசஞ் சம்பவிக்கும். கடுமையான நெருப்புக்காயங்கள் அடைந்தவர்கள் இம்மூவகை மோசங்களுக்கும் தப்பவேண்டும்.

நெருப்புக்காயங்களுக்குச் செய்யவேண்டிய வைத்திய பக்குவங்களெவையெனில்:

உடனே செய்யவேண்டிய மிகவும் முக்கியமான காரியமென்னவெனில்: நெருப்புக்காயத்தின்மேல் கொஞ்சமென்கிலும் காற்றுப்படாமலிருக்கும்படி செய்யவேண்டும். நெருப்புப்பட்டபின்பு எவ்வளவு சீக்கிரத்தில் காயத்தின்மேல் காற்றுப்படாமலிருக்கும்படி செய்கிறோமோ, அதற்குத் தக்கபடி வெகுசீக்கிரத்தில் நோவு குறைந்து காயம் ஆறிப்போம். இதற்காகப் பின்காட்டிய பக்குவங்களைச் செய்யலாம்.

தெளிந்த சுண்ணாம்புத்தண்ணீரையும், தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெயையும் சரிக்குச்சரியெடுத்துக் கலப்பதினாலுண்டாகும் பால்போன்ற தைலத்தை நெருப்புக்காயங்கள்மேல் நன்றாய்ப் பூசி, அதன்மேல் துணியைச் சுற்றிவைத்தால் மிகுந்த பிரயோசனமுண்டாகும்.

கறுவேலம்பிசின் அல்லது விளாம்பிசின் எடுத்துத் தண்ணீரில் சேர்த்துப் பசைசெய்து காயத்தின்மேல் நன்றாய்ப் பூசினால்

உடனே குணமுண்டாகும். மெல்லிசான கோதுமைமா, அரிசிமா சீமைச்சுண்ணும்புத்தூள் ஆகிய இவைகளைக் காயத்தின்மேல் கனமாய்த் தூவிவைத்தால் காயத்தின்மேல் காற்றுப்படாது; காயத்திலிருந்து சுரக்கும் நீர் உறிஞ்சிக்கொள்ளப்படும். வெட்டின மிருதுவான பருத்திப்பஞ்சையெடுத்து எண்ணெயில் தோய்த்தாவது தனியாயாவது நெருப்புக்காயங்களின்மேல் நன்றாய்ப் பொதிந்து கட்டிவைத்தால் பிரயோஜனமுண்டாகும்.

படிகாரம், அன்னபேதி ஆகிய இவற்றை வெறும் ஜலத்தோடாவது, கடுக்காய் ஜலத்தோடாவது சேர்த்து காயத்தின்மேல் போட்டால் குணமுண்டாகும். இப்படியே எழுதுகிற மையையும் போடலாம். பிராந்தி, சாராயம், மயில்துத்தம், வெண்துத்தம் ஆகிய இவற்றை ஜலத்தில்சேர்த்து உபயோகிக்கலாம். இவைகள் முதலாவது எரிவையுண்டாக்ினபோதிலும் சற்றுநோத்திற்குள்ளே குணத்தையுண்டாக்கும்.

நெருப்புப்புண்களின்மேல் பொருக்குகளுண்டானால் மாவுகிளறி போஸ்டிஸ் கட்டிவரவேண்டும். சிலவேளை நெருப்புப்புண்களிலிருந்து வடியும் நீர் ஓர்வகை கரகரப்புள்ளதாயிருந்து, அது பட்டவிடங்களிலெல்லாம் புண்களையுண்டாக்கும். இப்படிப்பட்ட புண்களின்மேல் சீமைச்சுண்ணும்புத்தூளைத் தூவுகிறதினலும், மாவுகிளறி போஸ்டிஸ் கட்டுகிறதினலும் குணமுண்டாகும். கொதிக்கிற ஜலமுதலியவற்றால் கொப்புளங்களுண்டானால் ஊசியினல் கொப்புளத்தைப் பத்திரமாய்க் குத்தி உள்நீரை வடித்துவிட்டு, பின்பு மேலே சொல்லிய மருந்துகளைப் பிரயோகிக்கவேண்டும். கொப்புளத்தின் தோலை உரித்துப்போட்டால் புண் சீழ்கோர்த்து தொந்தரவுசெய்யும்.

நெருப்புக்காயத்தினல் நோவு ஜாஸ்தியாயுண்டாயிருந்தால் அல்லது நித்திரைபிடிக்காதிருந்தால் வயதுக்குத்தக்கபடி அபீனைக் கொடுக்கலாம். பெரிய ஆட்களுக்கு ஒரு போதைக்கு ஒரு குண்டுமணிநிறை அபீனைக் கொடுக்கலாம். சிறுபிள்ளைகளுக்கு இதைக் கொடுக்கிறது நல்லதல்ல.

கடுமையான நெருப்புக்காயம்பட்ட உடனேயுண்டாகும் மயக்கத்திற்குக் கொஞ்சம் பிராந்தியும் ஜலமும் கொடுத்தால் நல்லது. மலக்கட்டாவது சுரமாவது உண்டாயிருந்தால், சிற்றமணக்

ருந்தபோதிலும், இதுவுமன்றி இவனுடைய வல்லமைகளினால் உலகத்துக்குண்டாகும் நன்மைபற்றி, இவனுடைய செருக்கை மற்றவர் ஒருவாறு பொறுத்துக்கொள்வாரானபோதிலும் இவன் செருக்கடையமாட்டான். ஆற்றுத்தண்ணீர் வாய்க்கால்வழியாய்க் கழனிகளுக்குப் பாய்ந்தபோதிலும், பயிர்களைப் போஷிக்கும் பெருமை ஆற்றுக்கேயுரித்தானதுபோல, எல்லா வல்லமைகளுக்கும் பிறப்பிடமாகிய கடவுள் இந்த வல்லமைகளைத் தன்மூலமாய் உலகத்தாருக்கு உபயோகப்படுத்துவதினால் இதில் தான் செருக்கடைய யாதொரு காரணமுமில்லையென்பது நிறைந்த அறிவுடையவனுடைய நிச்சயம்.

எவன் தன்னுடைய வல்லமையைக்குறித்துத் தானே புகழ்ந்துகொள்ளுகிறானோ, தன் முன்னிலையில் பிறருடைய வல்லமையைப் புகழ்ந்தால் அதைப் பொறுக்கமாட்டாதவனாயிருக்கிறானோ தன்னைப் பிறர்புகழவேண்டுமென்று விரும்புகிறானோ அவன் உண்மையாய்ச் சிறந்த அறிவும் வல்லமையும் உள்ளவனல்லவென்று தெரிந்துகொள்ளலாம்.

சீனதேசத்தில் உணவுபண்டங்கள் விற்றல்.

வேலைசெய்வதில் சுறுசுறுப்பிலும் யுக்தியிலும் கடவுளால் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களைத் தம்முடைய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிற வல்லமையிலும் சீனதேசத்தாருக்குச் சமமானவர்கள் மற்றொரு தேசத்தில் இல்லை. இவ்வளவு யுக்தியும் வல்லமையும் அவர்களுக்கில்லாமற்போனால், அவர்கள் உயிரோடிருப்பது அருமை. எப்படியெனில், அந்தத் தேசத்திலும் இந்த இந்தியா தேசத்திற்போலவே தேசத்தின் எல்லையை விட்டு ஜனங்கள் அப்புறம் போகக்கூடாதென்று ஒரு ஏற்பாடு உண்டு. இதுபற்றி இருப்பிடத்துக்குள்ளேயே, இவர்களில் ஒவ்வொருவனும் பிழைப்புக்கொருவழி தேடிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறபடியினாலே, விசேஷ பரபரப்போடும் யுக்தியோடும் வேலைசெய்யாவிட்டால் அங்கே இருப்பவர்களுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு உணவுபண்டங்கள் உண்டாக்கப்படுவது

கூடாமையாய்ப் போய்விடும். அதனால் அநேகர் கேவலம் பசியி னாலேயே இறந்துபோகும்படி நேரிடும். இந்தத் தேசம் மிகவும் பரப்பினதானபடியினாலே சிலவிடங்கள் அதிக குளிர்ச்சியான துகளாயும், சிலதுகள் அதிக உஷ்ணமானதுகளாயும், சிலதுகள் சமமான உஷ்ணமும் குளிர்ச்சியும் உடையதுகளாயும் இருக்கி றதுகள். அதனாலே சகலவித பதார்த்தங்களும் இந்தத் தேசத்தில் உத்பத்தியாகிறதுகள். இப்படியுண்டாக்கப்பட்ட பண்டங்களை பலவிதமான பெரியவண்டிகளிலும் கைவண்டிகளிலும் ஒற்றைச் சக்கரவண்டிகளிலும் போட்டுக்கொண்டு பட்டணங்களாயிருக்கிற இடங்களுக்குக் கொண்டுபோவார்கள். பட்டணங்களுக்குள் நுழைகிற வாசல்களில் இந்த வண்டிகள் இரண்டு ஓரங்களிலும் வரிசையாய் நிற்பதில் போவார் வருவார்களுக்கு இடம்போதா மல் நெருக்கமாயிருக்கும். இந்த வண்டிகளில் பிரம்பினால் செய்து படவுகளுக்குக் கட்டுவதுபோல பாய்கட்டிக் கையினால் தள் ளிக்கொண்டு போகப்பட்டதுகள் சிலதுகள் உண்டு. காற்று நே ரெதிராயிருந்தால்மாத்திரம் வண்டிக்குப் பாய்கட்டாமல் உடை யவன் கூலிகொடுத்து மற்றொருவனை உதவியாக வைத்துக்கொ ண்டு, ஒருவன் தள்ளவும் மற்றொருவன் ஒரு கயிறுகட்டி இழுக் கவும் இவ்விதமாய் வண்டியைச் செலுத்திக்கொண்டுபோவார்கள். காற்று எதிராயிராதபட்சத்தில் அது எவ்வளவு மெதுவானதாயி ருந்தபோதிலும் வண்டிகளைப் பாய்கட்டியே கொண்டுபோவார் கள். ஒருவனாலேயே அந்த வேலை சாயும்படியாயிருந்தால், கூலி கொடுத்து மற்றொருவனை வைத்துக்கொள்வதேயில்லை. பணத்தை இவ்வளவு செட்டோடு செலவுசெய்தல் சீனதேசத்தாருக்கு இயற் கை. இப்படி வண்டிகளுக்குப் பாய்கட்டிக்கொண்டுபோதல் நெடுங்காலமாய்ச் சீனதேசத்திலிருந்துகொண்டிருக்கிற வழக்கம். சீனதேசத்தாரும் இந்த இந்தியாதேசத்தாரைப்போலவே ஐரோ ப்பியர்களோடு பழகி, அவர்கள் தொழில்நடத்தும் வகையைக் கற்றுக்கொள்ள மனமில்லாதவர்களாயிருப்பவர்கள் எந்த எந்த வழக்கம் தங்களுடைய முன்னோர்கள்நாளில் இருந்ததோ அத தினிடத்தில் ஒரு தெய்வபக்திக் கொத்ததான விசுவாசம் வைத்து அதையே அநுசரித்துக்கொண்டுவருவார்கள்.

சுபாவத்தைச் சீர்திருத்திக்கொள்ளுதல்.

ஒரு மனிதனுடைய சுபாவத்தைச் சோதித்துப்பார்த்தால் அது எல்லா அமிசங்களிலும் குற்றமுள்ளதாகவாவது எல்லா அமிசங்களிலும் குணமுள்ளதாகவாவது இருக்கமாட்டாது. அதில் குணமும் குற்றமும் கலந்தேயிருக்கும். இப்படிக் குற்றமான அமிசங்களைத் திருத்திக்கொள்ள உதவும்படியாகத்தான் நீதிகளும் கதைகளும் ஏற்பட்டிருக்கிறது. இதுகளை யாவரும் படிக்கவேண்டியது யுக்தம்தான். ஆனால் அதுகளைக் கேவலம் பாடமாய்ப் படித்தலினாலேயே ஒருவனுடைய சுபாவத்திலுள்ள குற்றமான அமிசங்கள் நீக்கப்படுமென்று நம்பக்கூடாது. குற்றங்களை நீக்கிக்கொள்ளவேண்டுமென்கிற விருப்பமிருப்பவன் படித்தலோடு இன்னுஞ் சில முயற்சிகள் செய்யவேண்டியது. அவையாவன: தன்னுடைய சுபாவமானது படிப்படியாய்ச் செம்மைப்பட்டுக்கொண்டு வருகிறதாவென்பதை அப்போதுக்கப்போது சோதித்துப் பார்த்துக்கொள்ளவேண்டியது. இதற்காகத் தன்னிடத்திலிருக்கிற குணங்களையும் குற்றங்களையும் ஒன்றுவது விடாமல் வெவ்வேறாய்ப் பிரித்துவைத்து அந்த ஒவ்வொன்றைக்குறித்தும் குறைவற நிதானத்தோடு ஆராய்ச்சிசெய்யவேண்டியது. எந்த எந்த அமிசத்தில் குறைவு காணப்படுகிறதோ, எதெதில் சீர்திருத்தல், அவசியமானதாகவாவது விரும்பத்தக்கதாகவாவது தோற்றப்படுகிறதோ, அப்படிப்பட்ட ஒவ்வொன்றையும் குறிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது. மொத்தத்திற்குத் தன்னுடைய சுபாவம் எப்படிப்பட்டதென்பதைத் தானே பட்சபாதமில்லாமல் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளவேண்டியது. இதுவுமல்லாமல் புத்திசாலிகளாயும் நற்குண நற்செய்கையுடையவர்களாயும் இருக்கிற பெரியோர், தன்னுடைய குணத்தை முழுதும் அறிந்தால் தன்னைக்குறித்துப் பட்சபாதமில்லாமல் சத்தியமாய் அபிப்பிராயங்கொள்ளும்போது, தன்னை எப்படிப்பட்டவனென்று நினைப்பார்கள் அதையும், இப்போதே தன்னுடைய சுபாவத்தை முழுதும் அறிந்தவராயிருக்கிற கடவுள் தன் விஷயத்தில் என்ன அபிப்பிராயம்கொண்டிருக்கிறார் அதையும் நிதா

னித்துப் பார்த்துக்கொள்ளவேண்டியது. இப்படிப்பட்ட பரிசோதனையை மேலே சொல்லியபடி நாலுநாளுக்கொருதரமென்றே எட்டுநாளைக்கொருதரமென்றே ஒரு நியமம் வைத்து அந்த நியமப்படி விடாமல் செய்துகொண்டேவரவேண்டியது. இளமைக்குரிய களிப்பினாலாவது மேலெழுச்சியினாலாவது இந்தச் சோதனை விஷயத்தில் அசட்டைசெய்யக்கூடாது. இளமையில் புத்திசாலியாய் நடந்துகொண்டால் இதன் பயனாகிய இன்பம் மூதுமையில் அநுபவத்திற்கு வரும்.

சமாசாரம்.

சென்னைபுரி மருந்துப்பட்டடையில் நெருப்புப்பற்றியது.—நாளதும்ீ 10வ வெள்ளிக்கிழமை பின்னேரத்தில் மேற்படி மருந்துப்பட்டடையின் ஓர் அறையிலிருந்த மருந்தில் எவ்விதமாயோ நெருப்புப்பற்றி அக்கட்டடம் சின்னபின்னமாக வெடிக்க அவ்வறைக்குள் வேலைசெய்துகொண்டிருந்த ஐந்து வேலையாட்கள் பிராணசேதமடைந்தார்கள். அவர்களில் நான்குபேர்களின் சரீரம் துண்டுதுண்டுகளாகச் சிதறிக்கிடந்தது. இம்மருந்துப்பட்டடையில் ஏழுவருஷத்திற்கு ஒரு தடவையாக 1850, 1857, 1864, 1871-ம் வருஷங்களில் நெருப்புப்பற்றி மிகுந்த சேதத்தையுண்டாக்கியிருக்கிறது.

இந்தியவர்த்தகம்.—1869-70-வது வருஷத்தில் இந்தியாவில் இறக்குமதியான சாக்கின் விலை 47 கோடி ரூபாய். இங்கிருந்து புறத்தேசங்களுக்கு ஏற்றுமதியான சரக்கின் விலை 54 கோடி ரூபாய்.

இந்துக்களுக்குச் சீமையில் ஏற்படும் சர்வகலாசாலை.—சிவில் உத்தியோகத்தினிமித்தம் கல்விகற்க இந்திய வாலிபர் சீமைக்குப் போகவேண்டியிருக்கிறபடியால், அவ்விடத்தில் இந்துக்களுக்கு நூதன சர்வகலாசாலையொன்றை ஸ்தாபிக்கச் சிலர் எண்ணங்கொண்டிருக்கிறார்களாம்.